கற்றலுக்குப் பாதை அமைப்போம்

# முன்னேறுவோம்

# தமிழ்

## TAMIL

வகுப்பு 9

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்.

## முன்னுரை

2019 முதல் 2021 வரையிலான கோவிட் பெருந்தொற்றின் காரணமாக உருவான சூழ்நிலையால் மாணவர்களுக்கு நேரடிக் கல்வி முழுமையாகக் கிடைக்கவில்லை. மாணவர்களின் கற்றலில் சில இடைவெளிகள் இருப்பதாக 2022 இல் நடைபெற்ற முதல் பருவத்தேர்வுத் தாள்களை மதிப்பீடு செய்தபோதும், ஆசிரியர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டபோதும் தெரிய வந்தது. முன் வகுப்புகளில் கிடைக்கவேண்டியிருந்த சில கருத்துகள் மாணவர்களுக்கு மீண்டும் கிடைப்பதற்கும் தொடர்கல்வியை உறுதிப்படுத்துவதற்கும் உதவுகின்ற செயல்பாடுகளை உட்படுத்தி ஒரு சிறுநூல் உருவாக்கி வழங்க உள்ளோம். மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இடைவெளிக்குத் தீர்வுகாணும் வகையில் தேவையான விளக்கங்களும் செயல்பாடுகளும் இந்நூலில் உட்படுத்தப்படுள்ளன. மாணவர்கள் சுய கற்றல் அல்லது ஆசிரியர்களின் உதவியுடன் இச் செயல்பட்டு நூலைப் பயன்படுத்தித் தொடர்கல்வியில் நன்னம்பிக்கையோடு முன்னேற இயலட்டும்; வாழ்த்துகள்.

**இயக்குநர்**

எஸ்.ஸி.இ.ஆர்.டி

## உள்ளடக்கம்


- பட்டிமன்றக் குறிப்பு
- நயம் பாராட்டுதல்
- சுற்றறிக்கை
- பத்திரிகை செய்தி
- துண்டு பிரசுரம்
- கடிதம்
- கட்டுரை
- விளம்பரம்
- உறுதிமொழி
- விமர்சனம்
- தலையங்கம்

# பட்டிமன்றக் குறிப்பு

பட்டிமன்றம் என்பது தமிழ்மொழிக்கே உரிய மொழி வெளியீட்டு வடிவமாகும். முரண்பாடான பல நோக்கங்களை உடைய கருத்துக்களை விவரிக்க விவாதிக்க பரப்புரைக்க பட்டிமன்றங்கள் உதவுகின்றன.

**பட்டிமன்றம் தயார் செய்யும் முறை**

- தகவல்களைத் திரட்டுதல்
- தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்.
- பொறுத்தமான மேற்கோள்களைத் தேர்வு செய்தல்.
- நகைச்சுவையுடன் பேசுதல்.

**பட்டமன்றத்தின் முக்கியக் கூறுகள்**

- நகைச்சுவை உணர்வு
- விவாத உரை திறன்
- மொழிநடை

இன்று வெற்றியை பெரிதும்
தீர்மானிப்பது தனிமுயற்சியே! கூட்டு முயற்சியே!

நடுவர் அவர்களே!

எது வெற்றியைத் தருகிறது தனிமனித முயற்சியா கூட்டு முயற்சியா ஒன்றாகச் சேர்ந்து வெற்றிபெருவது வெற்றியல்ல ஒவ்வொரு மனிதனும் வெற்றிபெற வேண்டும். அதுதான் வெற்றி. தனிமனித முயற்சியால் தான் வெற்றி கிடைக் கும். அன்பிற்குரியவர்களே நீங்கள் ஒன்று சிந்தித்துப் பாருங்கள். நாம் குழு வாக அமர்ந்து படிக்கிறோம் என்றாலும் தேர்வு எழுதும் போது குழுவாகவா எழுதுகிறோம்?. நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாக படித்தால் மட்டுமே தேர்வில் வெற்றி பெற முடியும். இந்த சிறிய காரியத்தைக் கூட புரிந்துகொள்ள முடியாமல் கூட்டுமுயற்சியே வெற்றி பெறும் என்று பேச வந்திருக்கின்ற எதிர் அணியினரைப் பார்க்கின்ற போது எனக்கு சிரிப்பலை எழுகின்றது.

**உடல் ஆரோக்கியத்திற்கு உகந்தது**
**பாரம்பரிய உணவே? துரித உணவே?**

என்னும் தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்திற்கு ஏதேனும் ஒரு அணி சார்பில் பேசுவதற்கான உரைதயார் செய்வோம்.

தயார் செய்த பட்டிமன்ற உரையினைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பு வெளியீட்டு படைப்புத் தொகுப்பில் இணைப்போம்.

# நயம் பாராட்டுதல்

நயம் பாராட்டுதல் என்பது ஒரு கவிதையின் பல்வேறு கூறுகளைப் பகுப் பாய்வு செய்து அழகைப் பாராட்டுதல் ஆகும்.

ஒரு கவிதையின் அழகினைக் கண்டறிந்து விளக்குதலே நயம் பாராட்டுதல் என்று சுருக்கமாக கூறலாம்.

**தயார் செய்யும் முறை**

- மையக் கருத்து
- சொல்நயம் (எதுகை, மோனை, இயைபு, முரண்)
- பொருள் நயம்
- அணிநயம்

| | | |
|---|---|---|
| **மோனை** | - | அடிதோறும் முதல் எழுத்துக்கள் ஒன்றுபோல் வருவது. |
| **எதுகை** | - | அடிதோறும் இரண்டாவது எழுத்து ஒன்றுபோல் வருவது. |
| **இயைபு** | - | பாடலின் இறுதியில் எழுத்து அல்லது சொல் ஒன்றுபோல் வருவது இயைபு |
| **முரண்** | - | பாடல் வரிகளில் எதிர்ச்சொற்கள் பயின்று வருவது முரண் |
| **அணிநயம்** | - | உவமை, உருவகம் போன்ற அணிநயங்களைக் கண்டறிதல். |
| **ஓசைநயம்** | - | ஒத்த ஓசையுடைய சொற்களை கண்டறிதல். |

கீழ்வரும் பாடலை நயம் பாராட்டி எழுதுவோம்.

“அழிழ்தம் எங்கள் தமிழ்மொழி
அன்னை வாழ்க வாழ்கவே
வைய கத்தில் இணையி லாத
வாழ்வு கண்ட தமிழ்மொழி
வானகத்தை நாநிலத்தில்
வர வழைக்கும் தமிழ்மொழி
பொய் அகந்தை புன்மை யாவும்
போக்க வல்ல தமிழ்மொழி”

தமிழ் மொழியின் சிறப்புகளையும் பழமையையும் எடுத்துக்கூறுவதே இப்பா டலின் மையக் கருத்தாகும்.

**சொல்நயம்**

சொல்நயம் என்பது கவிதையில் இடம்பெற்றுள்ள எதுகை, மோனை, இயைபு, முரண் போன்றவற்றிற்கான இலக்கணங்களைச் சுட்டிக்காட்டி தகுந்த உதாரணங்களுடன் எடுத்துக் கூறுவதே ஆகும்.

**மோனைநயம்**

அடிதோறும் பாடலில் முதல் எழுத்துக்கள் ஒன்றுபோல் வருவது மோனையாகும். இப்பாடலில்

அமிழ்தம்

அன்னை என சொற்களின் முதல் எழுத்துக்கள் ஒன்றுபோல் வந்துள்ளன.

**பொருள்நயம்**

இவ்வுலகில் தோன்றிய மொழிகளுள் அமிழ்தம் போன்ற தமிழ்மொழி இணை யில்லாத சிறப்பு பெற்றது. இவ்வுலகம் முழுவதுமே நான்கு நிலத்திற்கும் அடங் கிய மொழி. தமிழ் மொழி கற்றால் உள்ளத்தில் உள்ள பொய், அகந்தை, சிறுமை போன்ற குணங்களைப் போக்கும் சிறப்பு தமிழ் மொழிக்குண்டு.

**கீழ்வரும் பாடலை நயம் பாராட்டி எழுதுங்கள்.**

கல்லும் மலையும் குதித்து வந்தேன்- பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்
எல்லை விரிந்த சமவெளி- எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன்- பல
ஏரிகுளங்கள் நிரப்பி வந்தேன்
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகளைப் பொங்கிட ஓடி வந்தேன்

தயார் செய்த நயம் பாராட்டுதலைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பில் வெளியிட்டு படைப்புத் தொகுப்பில் இணைப்போம்.

# சுற்றறிக்கை

செய்தி, ஆணை முதலியவற்றை அனைவருக்கும் தெரியப்படுத்தும் வகையில் சுற்றறிக்கை தயாரிக்கப்படுகிறது.

**சுற்றறிக்கை தயாரிக்கும் முறை**

- வடிவம்
- தலைப்பு,
- அழைப்புச்சொல்,
- உள்ளடக்கம்,
- பொறுப்பாளர்

உங்கள் பள்ளியில் நவம்பர் மாதம் 5, 6 நாட்களில் பள்ளி மாணவர் கலை விழா நடைபெற உள்ளது. பள்ளி மாணவர் தலைவரான நீங்கள் இதற்கான சுற்றறிக்கை தயார் செய்வோம்.

**சுற்றறிக்கை**

அன்பான மாணவர்களே!

நமது பள்ளியில் வருகின்ற நவம்பர் மாதம் 5, 6 ஆகிய நாட்களில் பள்ளி மாணவர் கலைவிழை நடைபெறவுள்ளது பல்வேறு வகையான கலைப் போட்டிகள் நடைபெறவுள்ளன. போட்டிகள் குறித்த விவரங்கள் தகவல் பலகையில் வெளியிடப்பட்டுள்ளது. போட்டிகளில் பங்குபெற விரும்பும் மாணவர்கள் தங்கள் பெயர்களை வகுப்பு ஆசிரியரிடம் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

இடம் இவண்

தேதி பள்ளி மாணவர் தலைவர்

உங்கள் பள்ளியில் ஜனவரி மாதம் 15, 16 நாட்களில் பள்ளிச் சுற்றுலா நடை பெற உள்ளது. பள்ளி மாணவர் தலைவரான நீங்கள் இதற்கான சுற்றறிக்கை தயார் செய்வோம்.

# பத்திரிக்கைச் செய்தி

நாட்டில் நடைபெறும் நிகழ்வுகளைப் பொதுமக்களுக்கு எடுத்துக்கூறுவதே பத்திரிக்கைச்செய்தியின் முக்கியக் கூறு என்று கூறலாம்.

**பத்திரிக்கைச் செய்தி தயார் செய்யும் முறை**

- மொழிநடை, அமைப்பு கவனத்தில் கொள்ளுதல்.
- ஒவ்வொரு செய்தியிலும் தலைப்பு, முகப்பு, உடல் போன்ற கட்டமைப்பு இடம் பெறுதல்.
- செய்தியின் மையக்கருத்து அல்லது தலைமைக் கருத்து செய்தியின் தலைப்பில் இடம் பெறுதல்.
- இடம், தேதி இடம் பெறுதல்.

## பத்திரிக்கைச் செய்தி

### வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக

## தமிழகம் புதுவையில் மழைக்கு வாய்ப்பு

### வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, நவ- 15

தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகம் மற்றும் புதுவையில் ( செவ்வாய் கிழமை ) மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவ மழை பெய்து வருகிறது. அது இன்றும் தொடரும் என வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது. தென்கிழக்கு அரபிக்கடலில் நேற்று முன்தினம் நிலவிய காற்றமுத்த தாழ்வுப்பகுதி வலு குறைந்து வளிமண்டல கீழடுக்கு சுழற்சியாக நிலவுகிறது. தெற்குவங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் ஒரு புதிய காற்றமுத்த தாழ்வுப் பகுதி 16 ஆம் தேதி ( நாளை ) உருவாக வாய்ப்புள்ளது.

உங்கள் பள்ளியில் போதைப்பொருள் விழிப்புணர்வு கலத்தரங்கு அக்டோபர் 6 ஆம் தேதி நடைபெற்றது. சுகாதாரத்துறை அமைச்சர் கந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் சேர்ந்து விழிப்புணர்வு பேரணியும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கான பத்திரிக்கைச் செய்தி தயார் செய்வோம்.

தயார் செய்த பத்திரிகைச் செய்தியைக் குழுவில் கலந்துரையாடி மேன்மைப்படுத்தி பள்ளி ஆண்டு மலர் தொகுப்பில் இணைப்போம்.

# துண்டுப்பிரசுரம்

தகவல்கள் வெளியிடுவதையோ, வேண்டுகோள் விடுத்தலையோ, கொள்கைகளைப் பரப்புவதையோ நோக்கமாகக் கொண்டு சுருங்கிய வடிவில் எழுதியோ அச்சிட்டோ நேரடியாக மக்களிடம் வினியோகிக்கப்படுவதை துண்டுப்பிரசுரம் எனப்படும்.

### துண்டுப்பிரசுரம் தயார் செய்யும் முறை

1) அறிவுறுத்தல்களை விடுப்பதற்காக எழுதப்படுதல்.
(சுகாதாரம், நோய்தடுப்பு, குடும்பநலன், விவசாயம் முதலாவற்றில் மக்கள் அனுசரிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி எழுதப்படும் துண்டுப் பிரசுரங்கள் அறிவுறுத்தல் சார்ந்தவையாகும்.)

2) கொள்கைகளைப் பரப்புவதற்காக எழுதப்படுதல்
(தேர்தல்களில் வாக்குகோருதல், தொழிற்சங்க ஆதரவு தேடல் என்பன பற்றி எழுதப்பட்டவை கொள்கை சார்ந்தவையாகும்.)

3) வேண்டுகோள்களை விடுப்பதற்காக எழுதப்படுதல்
(சிகிச்சை போன்றவற்றிற்கு நிதிகோருதல் மக்களை ஒன்று கூடுமாறு வேண்டிக்கொள்ளுதல், முதலானவற்றை பற்றி எழுதப்படுபவை வேண்டுகோள் சார்ந்தவையாகும்.)

### துண்டுப்பிரசுரத்தில் அமைய வேண்டிய கூறுகள்

- நோக்கத்தைப் புலப்படுத்தும் விதத்திலான கவர்ச்சிகரமான தலைப்பு
- தலைப்பு விளி
- விடய விபரிப்பு ( கவர்ச்சிகரமான மொழிநடை )
- வெளியிடுபவரின் பெயர்/ பதவி/ வெளியிடும் நிறுவனம்
- வெளியிடும் நாள்
- துண்டுப்பிரசுரத்தை எழுதும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்.
- குறித்த விடயம் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதுதல்.
- ஆர்வத்தைத் தூண்டும் சொற்கள், சொற்றொடர்களில் எழுதுதல்.

கொரோனா வைரஸ் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு முகாமை பொதுமக்களுக்கு அறிவிக்கும் பொருட்டு துண்டுபிரசுரம் தயாரிப்போம்.

**துண்டுப்பிரசுரம்**

**கொரோனா வைரஸ் தடுப்பு விழிப்புணர்வு முகாம்**

அன்புடையீர்

கொரோனா தொற்றால் அவதிப்படும் இந்தக் காலகட்டத்தில் வைரஸ் தொற்று ஒருவரிடமிருந்து ஒருவருக்கு பரவாமல் இருக்க மிகவும் முக்கியமான தேவை காற்றோட்டமுள்ள அறை, அடிக்கடி கை கழுவுதல், சமூக இடைவெளியை கடைபிடித்தல். மேற்கூறிய கருத்துக்களை கடைபிடியுங்கள், தொற்றுநோய் வராமல் பாதுகாத்திடுங்கள்.

இவண்
சுகாதார அமைப்பு
திருவனந்தபுரம் மாவட்டம்

மலை வளம் நாட்டின் உயிர் வளம் என்னும் கருத்தைப் பொதுமக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரம் தயார் செய்வோம்.

தயார் செய்த துண்டுப்பிரசுரத்தைக் குழுவில் கலந்துரையாடி மேன்மைப்படுத்தி பள்ளி ஆண்டு மலர் தொகுப்பில் இணைப்போம்.

# உறவுமுறைக் கடிதம்

உறவுகளுக்கிடையிலும் நண்பர்களுக்கிடையிலும் தகவல் பரிமாற்றத்திற்குப் பெருமளவில் உறவுக் கடிதம் உதவிசெய்கிறதென்று கூறினால் அது மிகையா காது. இன்று இணையம் வழியாக மின்னஞ்சல் அனுப்புதல் வழக்கத்தில் இருக் கிறது.

**உறவுமுறைக் கடிதம் தயார் செய்யும் முறை**

- இடம்
- நாள்
- விளி
- கடிதச்செய்தி
- இப்படிக்கு
- உறைமேல் முகவரி

**உறவு முறைக் கடிதம்**

இடம்
நாள்

விளி ( அன்புள்ள நண்பனுக்கு)

கடிதச் செய்தி

உறவுமுறைக் கடிதத்தில் முதலில் நலம் விசாரிக்க வேண்டும்.
நிகழ்ச்சி எதுவோ ( திருமணம், பிறந்தநாள், பரிசுபெறுதல் )
அதை எழுத வேண்டும்
நிகழ்ச்சியின் அடிப்படையில் ( வாழ்த்து அல்லது அதுபோன்று
செய் என்று அடிப்படையில் முடிக்க வேண்டும்.

இப்படிக்கு
அன்புள்ள நண்பன்
பெயர்

உறைமேல் முகவரி
பெயர்
திருவனந்தபுரம்
அஞ்சல் எண்

உன் பிறந்த நாளிற்கு பரிசளித்த உன் மாமாவிற்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதுவோம்..

14, பாரதி தெரு
ஆவடி, சென்னை
12.12.2022

அன்புள்ள மாமா

நலம், நலமறிய ஆவல். என் பிறந்த நாளிற்கு நீங்கள் பரிசாக அளித்த மிதிவண்டி எனக்கு மிகவும் பிடித்துள்ளது. அந்த மிதிவண்டியில் தான் நான் தினமும் பள்ளிக்கு செல்கிறேன். மிதிவண்டியில் செல்வது சிறந்த உடற்பயிற்சி யாக உள்ளது. நீங்கள் அளித்த பரிசிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வீட்டில் அனைவரையும் நான் விசாரித்ததாக கூறுங்கள்.

இப்படிக்கு
உங்கள் அன்புள்ள
கண்ணன்

உறைமேல் முகவரி
திரு. ச. ராஜா
இராம் நகர்
கொல்லம்.

---

புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுங்கள்.

இடம்
நாள்

அன்புள்ள அத்தைக்கு

நலம்..............................................................................................................

...........................................................................................................................

...........................................................................................................................

...........................................................................................................................

அந்நூலை வாங்கி எனக்கு அனுப்புப்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு

---

தயாரித்த கடிதத்தைக் குழுவில் கலந்துரையாடி மேன்மைப்படுத்தி பள்ளி ஆண்டு மலர் தொகுப்பில் இணைப்போம்.

# கட்டுரை

கட்டுரை, உரைநடை வெளிப்பாட்டின் முக்கிய வடிவமாகும். ஒரு பொருள் பற்றி சிந்தித்து தகுந்த தகவல்களைச் சேகரித்துப் பகுப்பாய்வு செய்து ஒழுங்குபடுத்தி எழுதுவதே கட்டுரை எனலாம்.

**கட்டுரை தயார் செய்யும் முறை**

- முன்னுரை, துணைத் தலைப்புகள், முடிவுரை என மூன்று பகுதிகளைக் கொண்டிருத்தல்.
- தொடங்கும் போதும், முடிக்கும் போதும் நல்ல வாசகங்கள், பாடல் வரிகள் மேற்கோள் காட்டுதல்.
- தலைப்புக்கேற்ற வகையில் பல உட்தலைப்புகள் கொடுத்து எழுதுதல்.
- எழுத்துப்பிழை, கருத்துப்பிழை, வாக்கிய பிழையின்றி எழுதுதல்.
- தேவையான நிறுத்தற் குறிகளிட்டு எழுதப்படுதல்.
- தெளிவான சிறுசிறு வாக்கியங்களாக அமைத்தல்.

நாட்டுப்புறக் கலைகளின் இன்றைய நிலை எனும் தலைப்பில் கட்டுரை எழுதுவோம்.

**முன்னுரை**

**நாட்டுப்புறக் கலைகள்**

**கலைகளும் பண்பாடும்**

நாட்டுப்புறக் கலைகள் ஒவ்வொன்றும் நமது சமுதாய பண்பாட்டின் அடையாள சிற்பங்களாகும். தமிழ் சமூகம் உலக அளவில் உச்சத்தை தொட்டதற்கு தமிழ் பண்பாட்டின் கலாச்சாரத்தின் அடிப்படை ஆணிவேறாக இருந்தது நமது நாட்டுப்புறக் கலைகளாகும். ' இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை என்பர். ஆனால் நமது நாட்டுப்புற இசைக்கு தெய்வமும் இறங்கி வரும் என்பது நமது கலைகளின் தனிசிறப்பாகும். ............................................................................................................

............................................................................................................................................

**தொழில்நுட்பங்களின் வளர்ச்சி**

தமிழக மக்களின் வாழ்வில் திரைப்படம், தொலைக்காட்சிகளில் வரும் தொடர்கள் அனைத்தும் முக்கியமான அங்கமாக மாறிவிட்டன. மேலும், இணைய வளர்ச்சியின் காரணமாக செல்பேசிகளில் உள்ள டிக் டாக் உள்ளிட்ட செயலிகள் சிறுவர் முதல் பெரியவர் வரை அனைத்து தரப்பினருக்கும் பொழுதுபோக்கு அம்சமாக மாறிவிட்டன. ....................................................................................................................

......................................................................................................................................................................

**நலிவடைவதற்கான காரணங்கள்**

நகரத்தாக்கம் மக்களின் வளர்ச்சி, பொருளாதாரம் சூழ்நிலை போன்ற பல்வேறு காரணங்களால்

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

**பாதுகாப்பதற்கான வழிமுறைகள்**

**முடிவுரை**

எழுதியக் கட்டுரையைக் குழுவில் கலந்துரையாடி மேன்மைப்படுத்தி பள்ளி ஆண்டு மலரில் வெளியிடுவோம்.

# விளம்பரம்

விளம்பரம் என்பது தகுதி உள்ள வாடிக்கையாளர்கள் ஒரு குறிப்பிட்ட வகை தயாரிப்புகள் அல்லது சேவைகளை அதிகளவில் வாங்குவதற்குத் தயாரிக்கப் பட்ட தொடர்பு பொருளாகும்.

**விளம்பரம் தயார் செய்யும் முறை**

- விளம்பரத்திற்கு என வடிவம் கிடையாது.
- பல்வேறு சூழல்களில் வெளிப்படுதல்.
- சுருக்கமான, தெளிவாக செய்திகளை வெளிப்படுத்துதல்.
- மக்களை ஈர்க்கும் வகையில் வாசகங்கள் அமைத்தல்.
- வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்கான படங்களை சேர்த்தல்.

சூழல் நட்பு பேனா தொடர்பான விளம்பரத்தைப் பூர்த்தி செய்வோம்.

மாணவர் தின சிறப்புத் தள்ளுபடி

இந்த தள்ளுபடி அக்டோபர் 15 முதல் 20 வரை

தயாரித்த விளம்பரத்தைக் குழுவில் கலந்துரையாடி மேன்மைப்படுத்தி பள்ளி ஆண்டு மலரில் வெளியிடுவோம்.

# உறுதிமொழி

அறிவுறுத்தல்களுக்கும் கீழ்படிவதற்கான கருத்துக்களைக் உள்ளடக்கிய தயாரிக்கப்படுவதை உறுதிமொழி எனலாம். மேலும் நம் வாழ்வில் கட்டாயமாகக் கடைபிடிக்க பழக்கவழக்கங்களைப் பின்பற்ற உறுதி ஏற்பதாக அமையும்

**உறுதிமொழி தயார் செய்யும் முறை**

- தன்மை இடத்தைக் குறிப்பதாக வாக்கியங்கள் அமைதல்.
- சுருங்கச் சொல்லுதல், தெளிவான மொழிநடையில் கூறுதல்.

**போதைப்பொருள் ஒழிப்பு**

நான் போதைப்பொருள் பயன்படுத்தமாட்டேன்

நான் போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிராக செயல்படுவேன். போதைப் பொருளால் தனிமனிதன் மட்டுமல்ல குடும்பம், சமூகம் போன்றவை பாதிக்கப் படுகின்றன என்பதை நன்கு அறிவேன். என் குடும்பத்திலும் சமூகத்திலும் எவரேனும் போதைப்பொருள் பயன்படுத்தினால் அவர்களுக்கு அறிவுரைக் கூறி நல்வழிப்படுத்துவேன். எனது நண்பர்களையும் இப்பழக்கத்தில் ஈடுபடாமல் பாதுகாப்பேன். அரசு வெளியிடும் போதைப்பொருளுக்கு எதிரான செயல்பா டுகளில் ஈடுபட்டு நாட்டைக் காப்பேன் என உறுதிமொழி கூறுகிறேன்.

சர்வதேச யோகா தினமான ஜூன் 21 ஆம் நாள் பள்ளிக் காலைக்கூட்டத்தில் யோகாவின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறும் வண்ணம் உறுதிமொழி தயார் செய்வோம்.

தயாரித்த விளம்பரத்தைக் குழுவில் கலந்துரையாடி மேன்மைப்படுத்தி பள்ளி ஆண்டு மலரில் வெளியிடுவோம்.

# விமர்சனம்

ஒரு படைப்பின் நிறை, குறைகளை அல்லது ஒரு செயலின் நன்மை, தீமைகளை மதிப்பீடு செய்வதே விமர்சனம் எனலாம்.

**விமர்சனம் தயார் செய்யும் முறை**

- மையக் கருத்தை சமகால சூழலுடன் ஒப்பிட்டுக் கூறுதல்.
- இக்கருத்து இக்காலத்திற்குப் பொருந்துமாறு உள்ளதா என மதிப்பிடுதல்
- சிறுகதையை விமர்சிக்கும் போது மையக்கருத்து, கதாப் பாத்திரங்கள், கதைஉத்தி, மொழிநடை போன்றவற்றை ஆராய்தல்.
- கதையின் நிறை, குறைகளை எடுத்துரைத்தல்.

அர்த்தமுள்ள பெருநாள் என்ற சிறுகதையின் மையக்கருத்து பாத்திரப் படைப்பு மொழிநடை படைப்பாக்க உத்திகள் போன்றவற்றை விமர்சனம் செய்வோம்.

தயார் செய்த விமர்சனத்தை குழுவில் கலந்துரையாடி மேன்மைப்படுத்தி வகுப்பு ஆண்டு மலரில் இணைப்போம்.

# தலையங்கம்

இதழ் நடத்துபவரின் எழுத்தாகவும், இதழில் வெளியாகும் செய்திகளுக்கெல்லாம் தலையானதும் தலையங்கமே.

**தலையங்கம் தயார் செய்யும் முறை**

- ஒரு பிரச்சனை அல்லது நிகழ்வை மக்களின் கருத்துக்களின் அடிப்படையில் வெளிப்படுத்துதல்.
- வல்லுநர் கருத்து (சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஊழல் ஒழிப்பு)
- ஆசிரியர் கருத்து (சமூகநலம் நீண்ட காலச் சிக்கல்கள்)
- சுய விருப்பு வெறுப்போடு, நடுவுநிலைமையோடு வெளியிடப்படுவது)
- தலைப்பு – ஒரு தலையங்கத்தின் முழு கருத்தையும் விளக்கும் வகையில் தெளிவாக அமைய வேண்டும் என்பதை விவாதித்துக் கூறுதல்.

நாட்டுப்புறக் கலைகள் தற்காலத்தில் நலிவடைந்து வருவதற்கான காரணங்களையும் அதைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளையும் சுட்டிக் காட்டும் வகையில் தலையங்கம் ஒன்று தயார் செய்வோம்.

தயார் செய்த தலையங்கத்தைக் குழுவில் கலந்துரையாடி மேன்மைப்படுத்தி பள்ளி ஆண்டு மலரில் இணைப்போம்.